டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வெல்லர்ஸ்
agridoctor.in | 12.03.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 217 - Madurai | Online Edition

நீர் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு வேண்டுகோள்

புது தில்லி, மார்ச் 11

புதுதில்லியில் நடைபெறும் நீர் திருவிழா 2026 நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு நேற்று கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், நீர் என்பது வெறும் அடிப்படை வசதியாக மட்டுமின்றி நமது கலாச்சாரம், பாரம்பரியம், வாழ்வாதாரம் மற்றும் சமூக வாழ்வுடன் தொடர்புடையது என்று கூறினார். பல ஆண்டுகளாக கிராமத்தினர் குறிப்பாக மகளிர் மற்றும் குழந்தைகள் பெரும் தொலைவில் இருந்து குடிநீரை எடுத்துவர வேண்டியிருந்ததாக தெரிவித்தார். தூய்மையான நீரை வழங்குவது வெறும் வசதிக்குரிய அம்சமாக மட்டுமின்றி, இது காலம், சுகாதாரம் மற்றும் கண்ணியம் குறித்த அம்சம் என்று அவர் கூறினார். இந்த சவால்களை எதிர்கொள்ளும் வகையில், ஜல் ஜீவன் இயக்கத்தை மத்திய அரசு தொடங்கியதாக அவர் தெரிவித்தார்.

குடிநீரை பெறுவதில் பெரும் சிரமத்தை எதிர்கொண்ட கிராமத்தினர் தற்போது தங்கள் வீடுகளில் தூய்மையான, பாதுகாப்பான நீரை பெறுவதாக கூறினார். நீர் ஆதாரத்தை பெறுவது வெறும் அரசின் பொறுப்பாக மட்டுமின்றி இது முழு சமூகத்தை சார்ந்தது என்று குறிப்பிட்டார். நீர் ஆய்வு செயல்பாடு மற்றும் இதர பாராமரிப்பு பணிகளில் சுயஉதவிக் குழுக்கள் ஈடுபட்டு உள்ளது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக குடியரசுத்தலைவர் தெரிவித்தார். சுயஉதவிக் குழுக்களின் உறுதிப்பாடு மற்றும் அர்ப்பணிப்பு, மகளிர் மற்றும் சமூகத்தின் வாழ்க்கையில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதற்கு பல உதாரணங்கள் இருப்பதாக கூறினார். நமது எதிர்காலத்தை பாதுகாக்க நாம் அவசியம் நீரை பாதுகாக்க வேண்டும் என்றும், இது நமது வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்றும் அவர் கூறினார்.

தென்னை விவசாயிகளுக்கான வயல் தின விழா

திருச்சி, மார்ச் 11

தென்னை அதிகம் பயிரிடும் பகுதியான ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், கொழந்தபாளையம் கிராமத்தில் 35 தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு, மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம் மற்றும் தமிழக தோட்டக்கலை துறை இணைந்து நடத்திய வாழை வயல் வெளிப்பள்ளியின் நிறைவு விழாவான தென்னை வயல் தின விழாவானது 10.03.26 அன்று கொழந்தபாளையதில் நடத்தப்பட்டது.

முன்னதாக இந்த கிராமத்தில் வயல் வெளிப்பள்ளியானது 14 வாரங்கள் நடத்தப்பட்டது. இதில் தென்னை சாகுபடி தொழில் நுட்பங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டது. இதில் மண் பரிசோதனை, விதை நேர்த்தி, பூச்சி நோய் மேலாண்மை, வயல் சூழல் ஆய்வு, நன்மை தீமை பூச்சிகள், இயற்கை பூச்சி மற்றும் பூஞ்சண விரட்டிகள், பஞ்சாகாவ்யா, தசகாவ்யா, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், பூச்சி ஒழிப்பில் பொறிகளின் பங்கு, கோகோகான் பயன்பாடு, தென்னை டானிக் பயன்பாடு, இயற்கை நுண் உயிரிகளின் பயன்பாடு போன்ற முக்கிய தொழில்நுட்பங்கள் விரிவாக செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து இப்பள்ளியின் இறுதி நிகழ்வாக வயல் தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழா மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் அமுதா தலைமை உரையாற்றினார். இம்மையத்தின் உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர்கள் ராஜேஸ்வரி, நிஸிந்தா மற்றும் ராஷ்மி சிறப்புரையாற்றினார்கள். விவசாயிகளுக்கு தென்னை சாகுபடி பற்றிய கையேடானது IPM Kit உடன் வழங்கப்பட்டு விழா நிறைவு செய்யப்பட்டது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

வேளாண்மை அதிகாரிகளால் உழவர் நல சேவை மையம் ஆய்வு செய்யப்பட்டது

அரியலூர், மார்ச் 11

அரியலூர் மாவட்டத்தில் தமிழக முதல்வரால், வேளாண்மை படிப்பு, தோட்டக்கலை படிப்பு, படித்த பட்டதாரிகளுக்காக 12 உழவர் நல சேவை மையம் தொடங்கப்பட்டது. அதில் அரியலூர் வட்டாரத்தில் உள்ள உழவர் நல சேவை மையத்தை வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனியின் வழிகாட்டுதலின்படி, வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் மற்றும் வேளாண்மை உதவி இயக்குனர் பரமசிவம், வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தி, வேளாண்மை அலுவலர் சிந்துஜா மற்றும் சுகந்தி, துணை வேளாண்மை அலுவலர் பாலுசாமி ஆகியோர்கள் ஆய்வு செய்தனர். ஆய்வின் போது உழவர் நல சேவை மையம் மூலம் விவசாயி களுக்கு எவ்வளவு இடுபொருள் விற்பனை செய்யப்பட்டது, எவ்வளவு இடுபொருள் இருப்பில் உள்ளது மற்றும் அனைத்து பதிவேடுகளும் ஆய்வு செய்யப்பட்டது. உழவர் நல சேவை மையத்தை எவ்வாறு தொழில்நுட்பத்துடன் செயல்படுத்த வேண்டும் என்பதை பற்றியும், விவசாயிகளுக்கு தேவையான காலங்களில் பயன்படும் வகையில், இடுபொருள்களான உரங்கள், விதைகள், பூச்சி மருந்துகள் மற்றும் விவசாய தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு, தொழில் நுட்பத்துடன், அதிகளவு இயற்கை வேளாண்மை பற்றியும், இயற்கையை உரங்கள் பயன்பாடு பற்றியும், உயிர் உரங்கள் பயன்பாடு பற்றியும், சுழற்சி பற்றியும், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம், ஒருங்கிணைந்த உரம் நிர்வாகம், ஒருங்கிணைந்த களை மேலாண்மை, ஒருங்கிணைந்த அறுவடை பின் செய் நேர்த்தி தொழில்நுட்பத்துடன், ஆலோசனைகள் வழங்கி விவசாயிகளின் இடுபொருள் செலவை குறைத்து, அதிக வருமானம் பெரும் வகை யில் செயல்பட வேண்டும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு டாக்டர் ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார். செந்துறை வட்டாரத் தில், ஆர்.எஸ் மாத்தூரில் நிலக்கடலை வயலை ஆய்வு செய்து விவசாயிக்கு தொழில்நுட்ப பரிந்துரை செய்தார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை

கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

பயிர் மேம்பாட்டில் முழு மரபணுத் தொகுப்பு முதல் முழு வெளிப்படும் பண்புகளின் தொகுப்பு வரை செய்முறை பயிற்சி

கோயம்புத்தூர், மார்ச் 11

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் சார்பில் "பயிர் மேம்பாட்டில் முழுமரபணுத் தொகுப்பு முதல் முழு வெளிப்படும் பண்புகளின் தொகுப்பு வரை" என்ற தலைப்பில் இரண்டு நாள் செய்முறை பயிற்சி 11.03.26 முதல் 12.03.26 வரை தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில் நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் நடைபெற்றது. இந்த பயிற்சி நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் கேரள வேளாண்மை பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை, தாவர உயிரித் தொழில்நுட்பத் துறையின் பேராசிரியரும் துறைத் தலைவருமான முனைவர் ஈ.கோகிலாதேவி, வரவேற்புரை வழங்கி தொடங்கி வைத்தார். காலநிலை மாற்றத்தைக் கையாளக் கூடிய பயிர்களை உருவாக்குவதில் ஃபீனோமிக்ஸ் மற்றும் ஜீனோமிக்ஸ் ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையத்தின் இயக்குநரான முனைவர் என்.செந்தில், பயிற்சியின் நோக்கத்தை விளக்கி, ஜீனோமிக்ஸ் தொழில்நுட்பங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும், பயிர் மேம்பாட்டில் ஃபீனோ மிக்ஸ் மற்றும் ட்ரோன் தளங்களின் பயன்பாட்டையும் எடுத்து உரைத்தார். இந்த பயிற்சி DBT Builder Programme திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது.

ஃபீனோமிக்ஸ் ஆய்வுகள் மூலம் உருவாகும் பெரிய அளவிலான துல்லியமான தரவுகளை செயற்கை நுண்ணறிவு கருவிகள் மூலம் பகுப்பாய்வு செய்யலாம் என்றும், அடுத்த தலைமுறை வரிசை நிர்ணய தொழில்நுட்பங்களின் மூலம் கிடைக்கும் ஜீனோமிக் தகவல்களுடன் இணைத்து பயிர் மேம்பாட்டு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். மேலும் எதிர்கால ஆராய்ச்சியாளர்கள் பல்துறை திறன்களுடன் உருவாக வேண்டும் எனவும் கூறினார்.

விதை மைய இயக்குநரான முனைவர் ஆர்.உமாராணி தொடக்க உரையாற்றி, விதை சான்றிதழ் வழங்கும் செயல் முறைகளில் மேம்பட்ட ஃபீனோடைப்பிங் தளங்களின் முக்கியத் துவத்தையும், மரபணு தூய்மையான விதை உற்பத்திக்கான முக்கிய வழிமுறைகளையும் விளக்கினார்.

நிகழ்ச்சியின் நிறைவாக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்பத் துறையின் பேராசிரியரும் துறைத் தலைவருமான முனைவர் எல்.அருள் நன்றி உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற தொழில்நுட்ப அமர்வுகளில் வள நிபுணர்கள் பல்வேறு அழுத்தங்களைத் தாங்கும் பயிர்களை உருவாக்குவதற்கான ஜீனோமிக்ஸ் உதவியுடன் இனப்பெருக்கம், மூலக்கூறு குறியீடுகளின் உதவியுடன் இனப்பெருக்கம் மூலம் வீழ்ச்சி இல்லாத வகைகளை உருவாக்குதல், ஃபீனோமிக்ஸ் தளத்தை பயன்படுத்தி திரையிடும் முறைகள், பயிர் ஜீனோம்களின் De novo assembly மற்றும் பயிர் மேம்பாட்டு திட்டங்களுக்கான SNP genotyping தளங்கள் போன்ற தலைப்புகளில் விரிவான விளக்கங்களை வழங்கினர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

வாழை விவசாயிகளுக்கான வயல் தின விழா

திருச்சி, மார்ச் 11

வாழை பயிரிடும் பகுதியான கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், சீகம்பட்டி கிராமத்தில் 35 வாழை பயிரிடும் விவசாயிகளுக்கு, மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம் மற்றும் தமிழக தோட்டக்கலை துறை இணைந்து நடத்திய வாழை வயல் வெளிப்பள்ளியின் நிறைவு விழாவான வாழை வயல் தின விழாவானது 10.03.26 அன்று சீகம்பட்டியில் நடத்தப்பட்டது. இதில் சீகம்பட்டி கிராமத்தை சேர்ந்த 35 முன்னோடி விவசாயிகள் பங்கு பெற்றனர்.

முன்னதாக இந்த கிராமத்தில் வயல் வெளிப்பள்ளியானது 14 வாரங்கள் நடத்தப்பட்டது. இதில் வாழை சாகுபடி தொழில் நுட்பங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டது. இதில் மண் பரிசோதனை, விதை நேர்த்தி, பூச்சி நோய் மேலாண்மை, வயல் சூழல் ஆய்வு, நன்மை தீமை பூச்சிகள், இயற்கை பூச்சி மற்றும் பூஞ்சண விரட்டிகள், பஞ்சாகாவ்யா, தசகாவ்யா, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், பூச்சி ஒழிப்பில் பொறிகளின் பங்கு, பனானா சக்தி பயன்பாடு, இயற்கை நுண் உயிரிகளின் பயன்பாடு போன்ற முக்கிய தொழில் நுட்பங்கள் விரிவாக செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து இப்பள்ளியின் இறுதி நிகழ்வாக வயல் தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழா மத்திய ஒருங் கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் அமுதா தலைமை உரையாற்றினார். இம்மையத்தின் உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர்கள் ராஜேஸ்வரி, நிஸிந்தா மற்றும் ராஷ்மி சிறப்புரையாற்றினார்கள். விவசாயிகளுக்கு வாழை சாகுபடி பற்றிய கையேடானது IPM Kit உடன் வழங்கப்பட்டு விழா நிறைவு செய்யப்பட்டது.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

பூக்கள் மிகுதியாக பூத்து திரட்சியான நிலக்கடலை பெற இலை வழி ஊட்டச்சத்து கரைசல்

திருச்சி, மார்ச் 11

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப்பாறை வட்டாரத்தில் மொண்டிப்பட்டி, தொப்பம்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்ட TMV–14, VRI-10 நிலக்கடலை விதை பண்ணைகளை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி ஆய்வு மேற்கொண்டார்.

நிலக்கடலை விதைப்பண்ணையில் மகசூலை அதிகரிக்கவும், பொக்கற்ற திரட்சியான காய்களைப் பெறுவதற்கும் மிக முக்கியமான இரு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த கேட்டுக் கொண்டார். பூக்கும் தருவாயில் பூக்கள் உதிர்வதைத் தடுக்கவும், பூக்கள் மிகுதியாக பூக்கவும், அறுவடையின் போது திரட்சியான நிலக்கடலைகளைப் பெறவும் இலை வழியே ஊட்டச்சத்து கரைசல் தெளிக்க அறிவுறுத்தினார்.

இதற்கு ஒரு ஏக்கர் பரப்பிற்கு ஒரு கிலோ டி.ஏ.பி. 400 கிராம் அமோனியம் சல்பேட், 200 கிராம் போராக்ஸ் ஆகியவற்றை இலை வழியாகத் தெளிக்க வேண்டும். இதற்காக முதல் நாள் இரவே 15 லிட்டர் நீரில் ஊற வைக்க வேண்டும். பின்னர், மறுநாள் காலை அக்கரைசலை வடிகட்டி கிடைக்கும் தெளிந்த கரைசலுடன் தேவையான நீர் சேர்த்து 200 லிட்டர் கரைசலாக தயார் செய்ய வேண்டும். அத்துடன் பிளானோபிக்ஸ் என்னும் பயிர் வளர்ச்சி ஊக்கியை 140 மில்லி லிட்டர் கலந்து விதைத்த 25-ம் நாள் ஒரு முறையும், பின்னர் 35-ம் நாள் மறுமுறையும் ஆக இரு முறை தெளிக்கும் பொழுது பரிந்துரைக்கப்பட்ட அளவு சரியாகவும், வயலில் ஈரப்பதம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

நிலக்கடலை பயிரில் விழுதுகள் மண்ணில் எளிதாக இறங்கவும், திரட்சியான எண்ணெய் சத்துமிக்க காய்கள் பெறு வதற்கும், சுண்ணாம்பு சத்தும், கந்தக சத்தும் தேவைப்படு கின்றன. எனவே 45ஆம் நாள் நிலக்கடலைக்கு மண் அணைப்பதற்கு முன் ஏக்கருக்கு 80 கிலோ கிராம் ஜிப்சம் இட்டு, களைகளை நீக்கி, செடிகளை சுற்றி நன்கு மண் அணைத்துவிட வேண்டும். இதனால் நிலக்கடலை பயிரின் விழுதுகள் மண்ணுக்குள் இறங்கி அறுவடையின் போது திரட்சியான காய்கள் அதிக அளவில் உருவாக உதவுகிறது.

முதிர்ச்சி அடைந்த காய்களை சுத்தம் செய்து நல்ல தரமான விதைகளை விவசாயிகள் விதை பயன்பாட்டுக்காக தேர்வு செய்து விவசாயிகள் விதைகளை வழங்கும்போது அந்த விதைகளுக்கு உள்ளூர் சந்தையில் விலை கிடைப்பதை விட அதிக விலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மூலம் கிடைக்க பெறுவதால் அதிக லாபம் பெறலாம்.

ஆய்வின் போது, விதைச்சான்று அலுவலர்கள் எஸ்.எம்.நிாத், ச.இலட்சுமிகாந்தன் மற்றும் உதவி விதை அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

மகளிர் தின விழா கொண்டாட்டத்தில் பங்கேற்ற வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருச்சி, மார்ச் 11

திருச்சி மாவட்டம், மணச்ச நல்லூரில், சமயபுரம் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தின் ராவே (RAWE) மாணவர்கள் சார்பில் சர்வதேச மகளிர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக மகளிர் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மணச்ச நல்லூர் பகுதியில் பேரணி நடத்தப்பட்டது. மேலும் பெண்களின் திறமைகளை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இந்த போட்டிகளில் பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி பெண்களின் முக்கியத்துவத்தையும் அவர்களின் சமூக பங்களிப்பையும் எடுத்துரைக்கும் வகையில் சிறப்பாக நடைபெற்றது.

விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் குறித்து நேரடி விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருச்சி, மார்ச் 11

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அந்தநல்லூர் பகுதியில் அமைந்து உள்ள அம்மன்குடி கிராமத்தில், தனலெட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழக இறுதி ஆண்டு வேளாண்மை வேளாண் பயிலும் மாணவர்கள், தங்களின் கிராமப்புற பணிப் பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக அந்தநல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீரங்கம் வாழை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்தில் (Srirangam Banana Farmers Producing Company) விவசாயிகள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் நோக்கம் விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு தொடர்பான புதிய மற்றும் பயனுள்ள தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதாகும். நிகழ்ச்சியில் மாணவர்கள் விவசாயி களிடம் நேரடியாக கலந்துரையாடி பல்வேறு பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து விளக்கினர். குறிப்பாக 3G கரைசல் (இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய்) தயாரிப்பு மற்றும் அதன் பயன்பாடு குறித்து நடைமுறை விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த கரைசல் பயிர்களில் ஏற்படும் பூச்சி தாக்குதலை குறைப்பதற்கும், பயிர் களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் உதவுகிறது என்று விளக்கப்பட்டது.

மேலும், விவசாயிகளுக்கு பூச்சி மேலாண்மைக்காக பயன் படுத்தப்படும் மஞ்சள் ஒட்டும் பொறி (Yellow Sticky Trap) குறித்து விளக்கப்பட்டது. இதன் மூலம் வெள்ளை ஈ, திரிப்ஸ் போன்ற பூச்சிகளை கட்டுப்படுத்த முடியும் என்றும், இதை வயல்களில் எவ்வாறு அமைப்பது என்பது குறித்து மாணவர்கள் நேரடியாகக் காட்டி விளக்கினர். அதனைத் தொடர்ந்து, வேப்பச் சாறு அடிப்படையிலான கரைசல் (Neem Extract Solution) தயாரிக்கும் முறை மற்றும் அதன் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்த இயற்கை முறைகள் பயிர்களுக்கு பாதிப்பு இல்லாமல் பூச்சிகளை கட்டுப்படுத்த உதவும் என்றும், குறைந்த செலவில் பயன்படுத்தக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் மாணவர்களின் விளக்கங்களை ஆர்வத்துடன் கேட்டறிந்து பல்வேறு கேள்விகளை எழுப்பினர். அதற்கு மாணவர்கள் விளக்கமாக பதிலளித்தனர். இக்கூட்டம் விவசாயிகளுக்கு புதிய அறிவு மற்றும் நடைமுறை அனுபவத்தை வழங்கியதாகவும், பயிர் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை அதிகரித்ததாகவும் கூறப்பட்டது.

பசுமை புரட்சியின் விளைவுகள் - (அறிவியலும் அரசியலும்)

காலம் தனது தேவைகளை தானே பூர்த்தி செய்து கொள்ளும் என்பதற்கிணங்க வேளாண்மையின் தேவையைக் கட்டமைத் ததில் அறிவியலும் அரசியலும் இணைந்த பின்பு தான் வேளாண்மையின் மதிப்பு பரவலாக அதிகரிக்க தொடங்கியது. அதை பற்றி விரிவாக பார்ப்போம்.

அறிவியலால் வளர்ந்த வேளாண்மை?

கனிம ஊட்டசத்துகள் தான் பயிருக்கு அடிப்படையானவை என முதன்முதலாக ஜெர்மானிய வேதியியலார் யூஸ்டுஸ் வான் லீபிக் (JUSTUS VON LIE BIG) அதனுடைய பின்னணியாக பயிரின் வளர்ச்சி விளைச்சல் நோய் எதிர்ப்புத்திறன் தன்மையை வெளிபடுத்திய கிரகோரி மெண்டல் போன்ற பலர் வேளாண் அறிவியலுக்கு தனது பங்களிப்பை செய்துள்ளது.

இவை ஒருபுறம் இருக்க பசுமைபுரட்சி 1940யில் முதன் முறையாக மெக்சிகோ நாட்டில் தொடங்கிய பின்னர் 1960களில் இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகள், ஆப்ரிக்கா வரை சென்றது. ஆரம்பத்தில் ராக்பெல்லர் பவுண்டேன் உதவியுடன் மெக்சிகோ நாட்டில் நார்மன் போர்லாக் கோதுமையில் புதிய ரகங்களை புகுத்தி அதிக விளைச்சலை கண்டார்.

இந்தியாவில் அந்த காலத்தில் தான் உணவுப் பஞ்சமும் மறுபுறம் பெற்ற விடுதலை சுதந்திர காற்றை சுவாசிக்க உயிர் வாழ வேண்டிய நிலையில் பசி, பட்டினியுடன் இருக்கின்ற காலத்தில் தான் முதல் ஐந்தாண்டு திட்டம் (1961-66) உணவு

தானிய பெருக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது. இருந்த போதிலும் அமெரிக்காவிடம் பெருமளவில் கோதுமையை இறக்குமதி செய்தது. இந்திய, பாகிஸ்தான் போர் காரணமாக உணவுத்தேவை சமாளிக்க அப்போதை பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி வாரத்திற்கு ஒரு முறை ஒரு வேளை உணவைத் தவிர்க்குமாறு மக்களிடம் கேட்டுக்கொண்டார். எப்படியேனும் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறவு அடைய வேண்டுமென பிரதமர் இந்திரகாந்தி முனைப்பு காட்டியதின் விளைவாக அப்போதைய மத்திய அமைச்சர் சி.சுப்பிரமணியன் ஆலோசனையின் பேரில் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனின் வழிகாட்டிலே தான் பசுமை புரட்சி (GREEN REVELATION) 1966யில் ராக்பெல்லர் பவுண்டேன் உதவியுடன் நார்மன் போர்லாக் ஆலோசனை யின்படி உற்பத்தியில் மாபெரும் புரட்சி விளைந்தது.

அதுமட்டுமல்ல 1950களில் வெறும் 50 மில்லியன் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி, தற்போது 357.73 டன்னாக உயர்ந்துள்ளன.

இது முழுக்க முழுக்க வேளாண்மையில் சாதனையாக இருந்தது, பசுமை புரட்சி தான் என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

அரசியல் கண்ட வேளாண்மை?

பசுமை புரட்சியால் உற்பத்தியை பெருக்கிய விவசாயிகள் அரசியல் நோக்கி நகரவும் செய்தாக கலிபோர்னியா விஞ்ஞானி கண்டறிந்தார்.

பசுமை புரட்சியால் ஒடுக்கபட்ட இடைநிலை சாதிகளை சேர்ந்த விவசாயிகளுக்கு வலுவூட்டி அரசியலில் பங்கு பெற வகித்தது. பசுமை புரட்சியால் விளைச்சல் உற்பத்தி மட்டுமன்றி அரசிய லிலும் விவசாயிகள் ஆதிக்கம் செலுத்தியுள்ளது என்பது தான் உண்மை.

ஆக, நாம் உண்ணும் உணவிலும் நம் அன்றாட வாழ்விலும் அறிவியலும் அரசியலும் தாக்கம் செலுத்திக் கொண்டே இருக்கின்றன.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

பருவ கால பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருச்சி, மார்ச் 11

திருச்சி மாவட்டம், புள்ளம்பாடி வட்டாரம் மால்வாய் கிராமத்தில் விவசாயிகளுக்கு தனலட்சுமி ஸ்ரீனிவாசன் பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவர்கள் ஊரக பங்கேற்பு மதிப்பீடு திட்டத்தின் கீழ் பருவகால பயிற்சி அளித்தனர்.

விவசாயிகள் பொதுவாக பருவ காலத்தில் கரும்பு தை, மார்கழி, கம்பு மாசி, வைகாசி, பருத்தி ஆடி, சித்திரை, எள்ளு தை, மாசி, சோளம் ஆவணி, தை. இவ்வாறு பயிரிடும் விவசாயிகளுக்கு காலநிலை மாற்றம், பூச்சி மற்றும் எலி தொல்லையை வரைபடத்தில் சுட்டிக்காட்டி பயிர்களை காப்பது தொடர்பாக சிறப்பு பயிற்சி அளித்தனர். இதில் மாணவர்கள் சமூக வரைபடம் மற்றும் வளமதிப்பீடு படம் கட்டிடம் தண்ணீர், தொட்டி, விவசாய நிலம் போன்றவற்றை வண்ணப்பொடி களை கொண்டு உருவாக்கினர். இதில் பொது மக்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இதன் ஏற்பாடுகளை பெ.மோகனப்பிரியா, சீ.முத்துமதி, ர.நர்மதா, அ.நிறைமதி, ரா.பவித்ரா, ரா.பிரியா, க.ரூபஸ்ரீ, க.ச.சாதனா, அ.சாலினி, செ.சந்தியா உள்ளிட்ட மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

வேளாண் கடன் அட்டை விவசாய வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கிறது

புது தில்லி, மார்ச் 11

விவசாயம் மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகள், வரலாற்று ரீதியாக நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்து வருகிறது. தேசிய வருவாய், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் கிராமப்புற வாழ்வாதாரங்களுக்கு கணிசமான பங்களிப்பை வழங்குகிறது.

நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 46.1 சதவீதம் பேர், தங்கள் வாழ்வாதாரத்திற்காக விவசாயம் மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது நிதிப் பாதுகாப்பையும், விவசாயிகளுக்கு கடனுதவி கிடைப்பதையும் உறுதி செய்வது மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. இந்தச் சூழலில், வேளாண் நிதியை வலுப்படுத்த இலக்குடன் கூடிய தொகுப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, குறிப்பாக வேளாண் கடன் அட்டை விரிவுபடுத்துதல் மற்றும் நவீனமயமாக்குவதில் கவனம் செலுத்துகிறது.

திருத்தியமைக்கப்பட்ட வேளாண் கடன் அட்டைத் திட்டம், குறுகிய கால பயிர் சாகுபடி, அறுவடைக்குப் பிந்தைய செயல்பாடுகள், சந்தைப்படுத்தல் தொடர்பான செலவுகள், வீட்டு நுகர்வுத் தேவைகள், பண்ணை பராமரிப்புக்கான பணி மூலதனம் மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றும் பண்ணை சாராத நடவடிக்கைகளுக்கான முதலீட்டு கடன் உள்ளிட்ட பல்வேறு வேளாண் தேவைகளுக்கு விவசாயிகளுக்கு போதுமான மற்றும் சரியான நேரத்தில் கடன் கிடைப்பதை உறுதி செய்ய வகை செய்கிறது.

வேளாண் கடன் அட்டை, சிறு, குறு, குத்தகை விவசாயிகள் மற்றும் சுய உதவிக்குழுக்கள் உள்ளிட்ட விவசாயிகளுக்கு சரியான நேரத்தில், மலிவு விலையில், பிணையமில்லாத கடனுதவியை வழங்குகிறது.

மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டத்தின் கீழ், கடன் உச்சவரம்பு ரூ 5 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பிணை யில்லாத கடனுதவித் தொகை தலா ரூ. 2 லட்சமாக உயர்த்தப் பட்டுள்ளது.

நாடு முழுவதும் 7.72 கோடிக்கும் அதிகமான வேளாண் கடன் அட்டைகள் தற்போது செயல்பாட்டில் உள்ளன. ரூ 10.2 லட்சம் கோடி கடன்கள் நிலுவையில் உள்ளன.

வேளாண் கடன் அட்டைக்கான இணையதளம் 457 வங்கிகளில் இணைந்துள்ளதுடன், வர்த்தக, பிராந்திய, கிராமப்புற மற்றும் கூட்டுறவு வங்கிகளில் 1,998.7 லட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது.

உழவன் செயலி பற்றி வேளாண்மை பயிலும் மாணவர்கள் விளக்கம்

திருச்சி, மார்ச் 11

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், துவாக்குடியில் உள்ள விவசாயிகளிடம் உழவன் செயலி பற்றி விளக்கினர்.

உழவன் செயலி (Uzhavan App) என்பது தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை மூலம் விவசாயிகளுக்கு மானியங்கள், பயிர்க் காப்பீடு, சந்தை விலை, வானிலை முன்னறிவிப்பு மற்றும் வேளாண் இயந்திர வாடகை போன்ற அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்கும் என தெரிவித்தனர்.

விவசாயிகளுக்கு கரும்பு செட் சிகிச்சை பயிற்சி வகுப்பு நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்

திருச்சி, மார்ச் 11

கோமாக்குடி கிராமத்தில் விவசாயிகளுக்கு கரும்பு செட் சிகிச்சை பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இதில் விவசாயிகளுக்கு வேளாண் கல்லூரி மாணவிகள் பயிற்சி முறை அளித்தனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டாரத்தில் கோமாக்குடி கிராமத்தில் கரும்பு செட் சிகிச்சை குறித்து விவசாயிகளுக்கு செய்முறை பயிற்சி நடைபற்றது. திருச்சி தனலட்சுமி ஸ்ரீனிவாசன் பல்கலைக்கழகம் சமயபுரம், வேளாண் இறுதி ஆண்டு மாணவிகள் செய்முறை விளக்கத்தை விவசாயி களுக்கு தெரிவித்தனர்.

இதன் நோக்கம்

- பூஞ்சை நோய் தடுப்பு.
- பூச்சி தாக்குதல் குறைப்பு.
- முளைச்சல் விதம் அதிகரிப்பு.
- ஆரோக்கியமான வளர்ச்சி என இதில் நான்கு நோக்கங் களை தெரிவித்தனர்.

நடைமுறை

- 1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் கார்பெண்டாசிம் சேர்த்து ஆரோக்கியமான 8-10 மாத வயதான கரும்பில் 2-3 கண்கள் செட் வெட்டி எடுத்துகொள்ளவும்.
- தயாரிக்கப்பட்ட மருந்து கலவையில் 10-15 நிமிடம் நனைத்து அதனை நிழலில் ஊரவைக்கவும்.
- உடனடியாக நடவு செய்யவும் என்று விவசாயிகளுக்கு கல்லூரி மாணவிகள் செய்முறை விளக்கம் அளித்தனர்.

சிப்பி காளான் உற்பத்தி (Mushroom)

பருவம் மற்றும் இரகங்கள்

- வருடம் முழுவதும் காளான் வளர்க்கலாம்
- காளான் வளர்ப்பை வீட்டிலேயே செய்யலாம் அல்லது காளான் குடில் அமைத்து செய்யலாம்.

● வெள்ளைச் சிப்பி (கோ-1), சாம்பல் சிப்பி (எம்.டி.யு-2), ஏ.பி.கே.-1 (சிப்பி) ஆகிய காளான் தமிழ்நாட்டிற்கு ஏற்றவை

காளான் குடில்

● 16 சதுர மீட்டர் பரப்பு கொண்ட கூரை மேயப்பட்ட குடில் போதுமானதாகும். குடிலை, வித்துப் பரவும் அறையாகவும், காளான் வளர்ப்பு அறையாகவும் பிரிக்கவும்.

● **வித்து பரவும் அறை :** 25-30°சி வெப்பநிலை, நல்ல காற்றோட்டம், இருட்டு இல்லாமல் இருக்க வேண்டும்.

● **வளர்ப்பு அறை :** 23-25°சி வெப்பம், 75-80% ஈரப்பதம், மிதமான வெளிச்சம், நல்ல காற்றோட்டம் தேவை. (தெர்மா மீட்டர், ஈரப்பத மீட்டர் போன்றவை எலக்ட்ரிக் கடைகளில் விற்பனைக்கு கிடைக்கும்).

காளான் வித்து

● **ஏற்ற தானியங்கள் :** சோளம் / மக்காச்சோளம் / கோதுமை

● **வித்து தயார் செய்தல் :** தானியங்களை அரை வேக்காடு வேகவைத்து, காற்றில் உலர்த்தி, 2% சுண்ணாம்புடன் கலந்து, காலியான குளுக்கோஸ் பாட்டில்களில் இடவேண்டும். பின்பு தண்ணீர் உறிஞ்சாப் பஞ்சினால் அடைத்து நுண்கிருமிகளை அழிக்க குக்கரில் அடுக்கி 2 மணி நேரம் வேக வைக்க வேண்டும்.

● வேளாண் பல்கலைக்கழகமோ, வேளாண் துறையோ உற்பத்தி செய்த தூய்மையான தாய் காளான் வித்தை தானியம் நிரப்பப்பட்ட குளுக்கோஸ் பாட்டிலில் கலந்து, சாதாரண வெப்ப நிலையில் 15 நாட்கள் தனியாக வைக்க வேண்டும். பிறகு 15-18 நாட்கள் வயதுடைய காளான் வித்தை காளான் தயாரிப்புக்கு பயன்படுத்த வேண்டும்.

காளான் படுக்கை அமைத்தல்

● **ஏற்ற பொருட்கள் :** வைக்கோல் / கரும்புச்சக்கை, உமி நீக்கிய மக்காச்சோளக் கருது

● **மூலப்பொருள் தயாரித்தல் :** முழு வைக்கோலை 5 செ.மீ நீளமுள்ள சிறு துண்டுகளாக வெட்டி, 5 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து 1 மணி நேரம் வேக வைத்து, தண்ணீரை வடிகட்டி, 65% ஈரப்பதம் வரை காற்றில் உலர்த்திய (கைகளால் வைக் கோலைப் பிழிந்தால் தண்ணீர் சொட்டாமல் இருக்கும் வரை) வைக்கோலை பயன்படுத்த வேண்டும்.

காளான் பைகள் / படுக்கைகள் தயார் செய்தல்

● காளான் படுக்கைகள் தயார் செய்ய 60 X 30 செ.மீ பாலீத்தின் பைகளை உபயோகிக்க வேண்டும் (உபயோகப் படுத்தும் பைகள் இரு பக்கமும் திறந்திருக்க வேண்டும்).

● பாலித்தீன் பையை ஒரு பக்கத்தில் கட்ட வேண்டும். 1 செ.மீ அளவிற்கு நடுவில் 2 ஓட்டை போடவும்.

● வைக்கோலை ஒரு பக்கம் கட்டப்பட்ட வட்ட வடிவப் பைக்குள் 5 செ.மீ உயரத்திற்கு நன்கு அழுத்தவும். பின்பு 25 கிராம் காளான் வித்தைத் தூவ வேண்டும்.

● இதே போல் 25 செ.மீ வைக்கோல் தளத்தை அமைக்கவும். காளான் வித்து தளத்தையும் வைக்கோல் தளத்தையும் 4 அல்லது 5 அடுக்குள் மாறி மாறி நிரப்ப வேண்டும். வாயிலை நன்றாகக் கட்டி, குடிலினுள் உள்ள பரண் போன்ற இருப்பில் வைக்க வேண்டும்.

● விதைத்த 15-20 நாட்களில் காளான் படுக்கை முழுவதும் வெண்மையான காளான் இழைகள் படர்ந்திருக்கும். பின்னர் சுத்தமான கத்தியைக் கொண்டு பாலித்தீன் பையைக் கிழிக்க வேண்டும்.

● காளான் படுக்கை காயாமல் இருக்க தினமும் தண்ணீரைக் கைதெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

அறுவடை

● பைகளை கிழித்த 3 ஆம் நாளில் காளானின் மொட்டுகள் சிறு திறள் போன்று காணப்படும். 3 நாட்களில் முழுவளர்ச்சி அடையும்.

● தண்ணீர் தெளிக்கும் முன் காளான் அறுவடை செய்ய வேண்டும். அறுவடையை தினமுமோ அல்லது ஒரு நாள் விட்டு ஒரு நாளோ செய்யலாம்.

● முதல் அறுவடைக்குப் பின் காளான் படுக்கையை ஒரு தகடு கொண்டு லேசாகச் சுரண்டி விட்டு, பின்பு தண்ணீர் தெளித்து வந்தால் இரண்டாம், மூன்றாம் அறுவடை செய்யலாம்.

தகவல் : ம.பானுப்பிரியா, Email : banumalai1996@gmail.com, உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல்), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.

தமிழ்நாட்டில் விதைச் சேமிப்பில் உள்ள பாரம்பரிய தொழில்நுட்ப அறிவின் தாக்கம்

விதைச் சேமிப்பு விவசாயத்தில் மிக முக்கிய பங்கை வகிக்கிறது. சிறந்த விதை இல்லாதபட்சம், விவசாயம் நிலைத்திர முடியாது. தமிழ்நாட்டில் விவசாயிகள் நூற்றாண்டுகளாக பாரம்பரிய தொழில்நுட்ப அறிவு (Indigenous Technical Knowledge - ITK) முறைகளைப் பயன்படுத்தி விதைகளை சேமித்து வருகிறார்கள். இத்தொழில்நுட்பம் அறிவியல் முறைகளுடன் இணைந்தால், விதையின் செழிப்பு, வாழ்நாள் மற்றும் உற்பத்தி திறன் பெரிதும் அதிகரிக்கப்படுகிறது.

பாரம்பரிய தொழில்நுட்ப அறிவு என்றால் என்ன?

பாரம்பரிய தொழில்நுட்ப அறிவு என்பது

- துறையில் அனுபவம் மற்றும் பாரம்பரிய முறையில் உருவான அறிவு
- இயற்கை வளங்களின் சிறந்த பயனீடு
- சூழல் சார்ந்த தீர்வுகள் மற்றும் குறைந்த செலவு
- இடம் பெயர்ந்த விவசாய முறை, ஊர்வல விவசாயிகள் மற்றும் பழங்குடிகளின் அனுபவம் அடிப்படையிலான அறிவு

தமிழ்நாட்டில் விதைச் சேமிப்பில் ITK முறைகள்

இயற்கை குளிர்பிடிப்பு

- நெல் விதைகள், கம்பு விதைகள் போன்றவை கடலோரக் குளங்கள் அருகே கல் தளங்களில் வைக்கப்படும்.
- வெப்பநிலை குறைவாக, ஈரப்பதம் நிலைத்திருப்பதால் விதை வாழ்நாள் நீடிக்கும்.

காகிதம் மற்றும் இலையால் மூடல்

- விதைகளை சுத்தமான காகிதப் பையில் வைத்து பல் அடுக்கு மூடியல்.
- பொன் அல்லது பசுமை இலைகளை இடம் பொருத்தி சேமிப்பதால் பூச்சி தாக்கம் குறைகிறது.

நறுமண மூலிகைகள்

● விதை சேமிப்புப் போது வேர்கடலை, தேங்காய் இலை, மஞ்சள் தூள் போன்ற இயற்கை பூச்சிக்கொல்லிகள் சேர்க்கப் படுகின்றன.

● இதனால் பூச்சிகள், புழுக்கள் மற்றும் கிருமிகள் விதையை சேதப்படுத்த முடியாது.

சிறிய கிண்ணங்கள் மற்றும் ஓட்டைகள்

● தரமான மண் அல்லது மணலைக் கொண்டு வட்டக் கிண்ணங்களில் விதை சேமிப்பு.

● காற்றோட்டம் நல்ல நிலையில் இருக்கும், ஈரப்பதம் கட்டுப்பாடு.

புகைத் தொழில்

● சில இடங்களில் விதைகளை சிறிய மரக் புகையில் எடுத்து நைட்ரஜன் கண்ணோட்டத்தை அதிகரித்து சேமிப்பார்கள்.

● இதன் மூலம் பூச்சி தாக்கம் குறையும், விதையின் தன்மை பாதுகாக்கப்படும்.

ITK முறைகளின் நன்மைகள்

● **விதை செழிப்பு அதிகரிப்பு :** விதையின் வெள்ளை மற்றும் சுறுசுறுப்பு நிலைத்திருக்கும்.

● **நோய் எதிர்ப்பு :** பூச்சி மற்றும் கிருமிகள் தாக்கத்தை குறைக் கிறது.

● **பயிர் உற்பத்தி அதிகரிப்பு :** நல்ல விதை தரம் அதிக விளைச்சலை உறுதி செய்கிறது.

● **குறைந்த செலவு :** வேதியியல் மருந்துகள், குளிர்பிடிப்பு சாதனங்கள் தேவையில்லை.

● **சுற்றுச்சூழல் பாதுகாப்பு :** இயற்கை வளங்களை பயன்படுத்தி பசுமை முறையில் சேமிப்பு.

விதை பாதுகாப்பில் அறிவியல் முறைகளுடன் ஒப்பீடு

அம்சம்	பாரம்பரிய ITK	அறிவியல் முறை
செலவு	குறைவு	அதிகம்
இயற்கை வள பயன்பாடு	அதிகம்	குறைவு
பூச்சி எதிர்ப்பு	இயற்கை முறையில்	ரசாயன மருந்துகள்
விதை செழிப்பு	நீண்டகாலம்	கட்டுப்பட்டது
சோதனை மற்றும் கண்காணிப்பு	அனுபவம் அடிப்படையில்	ஆய்வறை அடிப்படையில்

தமிழ்நாட்டில் ஞாவீலு விதை சேமிப்பு நடைமுறை

● **கீழ்க்கண்ட மாவட்டங்கள் :** திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், விருதுநகர், மதுரை

● நெல், கம்பு, பருப்பு வகைகள் பரவலாக ITK முறையில் சேமிக்கப்படுகின்றன.

● விவசாயிகள் சதா முன்னேற்ற முறைகளை பழக்கவழக்கம் செய்து வருகின்றனர்.

சமூக மற்றும் பொருளாதார தாக்கம்

● சிறு நிலக்கார விவசாயிகள் ITK மூலம் விதைச் செலவு குறைத்து வருமானம் அதிகரிக்க முடிகிறது.

● ஊர்வல விவசாயிகள் மற்றும் பழங்குடி சமூகங்கள் விவசாய அறிவை பரம்பரை முறையில் பரப்புகின்றனர்.

● விதை சேமிப்பு திறன் அதிகரிப்பால் குடும்ப நன்மையும், கிராமப்புற வளர்ச்சியும் நேரடியாக பாதிக்கப்படுகிறது.

சவால்கள் மற்றும் தீர்வுகள்

● ITK முறைகள் சில சமயங்களில் அதிக காலம் எடுத்துக் கொள்ளும்.

● அதிக பருவநிலை வெப்பம் மற்றும் ஈரப்பதம் பூச்சி தாக்கத்தை அதிகரிக்கும்.

● சந்தை நிலைமாற்றங்கள் விவசாயிகளை பாதிக்கிறது.

● ITK + அறிவியல் முறைகள் ஒருங்கிணைப்பு.

● அரசு பயிற்சி முகாம்கள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவு.

● நல்ல தர விதைகளைப் பாதுகாக்கும் கூட்டு சேமிப்பு மையங்கள்.

தமிழ்நாட்டில் பாரம்பரிய தொழில்நுட்ப அறிவு (ITK) விதைச் சேமிப்பில் ஒரு சக்திவாய்ந்த கருவியாக உள்ளது. இது விதை செழிப்பு, உற்பத்தி திறன், நிலைத்த விவசாயம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்கிறது. இந்த பாரம்பரிய அறிவும் நவீன அறிவியலையும் இணைத்து செயல்பட்டால், தமிழ் நாட்டின் விவசாயிகள் தொழில்நுட்ப சிறப்பையும், பொருளாதார நிலைத்தன்மையையும் பெற முடியும். “நல்ல விதை, நல்ல விளைச்சல், நல்ல வாழ்வு” - தமிழ்நாட்டில் ITK விதைச் சேமிப்பின் அடிப்படை நற்செயல்.

தகவல் : **வெங்கடேஷ் ம, நிவேதா,ஆ.ல. உதவிப் பேராசிரியர்கள் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), ஸ்ரீதேவி ச, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

Toll Free No. 1800 - 4257333